**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06ஆம் நாள் சனிக்கிழமை

**IA.No.03/2025 in OS.No.202/2022**

**TNTM 03000504/2022**

தண்டபாணி ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிராக/

1. ராஜேஸ்வரி ... எதிர்மனுதாரர்/வாதி
2.பூங்காவன அம்மாள்
3. லட்சுமி முருகேசன் ... எதிர்மனுதாரர்கள்/2 மற்றும் 3 பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 14.10.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.மணிகண்டன், திரு. M.செல்வகுமார், மற்றும் திரு.E.யுவராஜ், ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.தனஞ்செயன்,M.A.LL.B., திரு.N.ஜெகதீசன்,B.A.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள வாதி தரப்பு சாட்சிகளை மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மேற்கண்ட வழக்கினை Re–open உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1**. மனுதாரர்/ 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர், இம்மனுவின் மனுதாரர் ஆவேன். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் மாவட்ட உரிமையில் நீதிமன்றம், ஆரணியில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுதாரர் அசல் வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி

எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். Covid–19 பிரச்சனையாலும், மனுதாரருக்கு ஏற்பட்ட பொருளாதார பிரச்சனையாலும், மனுதாரருக்கு ஏற்பட்ட உடல்நிலை பிரச்சனையாலும், மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. மனுதாரருக்கு உடல் நிலை சரியாகி தனது தரப்பில் புதிய வழக்கறிஞரை 04.11.2024ல் நியமனம் செய்தார். வழக்கு என்ன நிலையில் உள்ளது என்பதை நீதிமன்றத்தில் மனுதாரர் வழக்கறிஞர் மூலம் பார்வையிட்டபோது, கடந்த 29.03.2022ம் தேதி மனுதாரர், வாதி தரப்பு சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்ய ஆஜராகாததால், ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பது தெரியவந்தது. இந்நிலையில், திருவண்ணாமலை, முதன்மை மாவட்ட நீதிமன்றம் Transfer O.P.No.21/2018 என்ற மனுவில், 16.06.2022ல் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கான அ.வ.எண்.70/2012 வழக்கானது ஆரணி, சார்பு நீதிமன்றத்தில் உள்ள அ.வ.எண்.65/2014 என்ற வழக்குடன் சேர்ந்து விசாரணை நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.70/2012 ஆன இந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு புதிய அ.வ.எண்.202/2022 என்று புதிய எண் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் தெரிந்தவுடன் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யவும், வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மறு திறப்பு செய்ய ஒரு மனுவும், வாதி தரப்பு சாட்சியை மீண்டும் அழைக்க ஒரு மனுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கினை மறு திருப்பு செய்யாமல் போனால், மனுதாரருக்கு பெருத்த இழப்பு ஏற்படும். இம்மனுவை அனுமதிப்பதினால், எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2**. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மேற்படி மனுவின் மனுதாரர் மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரரை கனம் ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.70/2012ல் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் வாதி தரப்பு சாட்சிகளை தன் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உள்ளதால் மேற்கண்ட வழக்கினை Re–open செய்ய கோரும் மனுவானது சட்டப்படியும் நியாயப்படியும் செல்லதக்கதல்ல. மேற்கண்ட மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் ஒருசிலவற்றை தவிர ஏனைய சங்கதிகளை இவ்வெதிர்மனுதாரர் முற்றிலுமாக மறுக்கின்றார். மேற்கண்ட மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பாரா 2ல் கண்டுள்ள சங்கதியின் படி மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக விசாரணை நீதிமன்றத்தில்

தாவா சொத்தானது தனக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி வாதியின் அனுபவத்தை தடை செய்ய கூடாது என்றும், வழக்கு தாக்கல் செய்திருப்பது வாஸ்தவம். ஆனால், மேற்கண்ட மனுதாரர் கூறுவது போல் தாவா பதிலுரை தாக்கல் செய்த சமயத்தில் கோவிட்–19 நோய் தாக்கம் காரணமாக அக்கால கட்டத்தில் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றும், எனவே கனம் கோர்ட்டில் ஆஜர் ஆக இயலவில்லை என்று கண்டுள்ள சங்கதிகளை பொறுத்து மனுதாரரே நிருபணம் செய்ய வேண்டியது.

3. மேற்கண்ட மனுதாரர் தாக்கல் செய்துள்ள அபிடவிட பாரா3ல் கண்டுள்ள சங்கதிகள் குறித்து மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. அதில் கண்டுள்ளவாறு 04.11.2024 அன்று புதிய வழக்கறிஞரை நியமனம் செய்து அதன் பேரில் வழக்கின் கோப்புக்களை பார்த்த போது மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரரை 29.03.2022 ல் தன் தரப்பில் கீழமை நீதிமன்றத்தில் விசாரணை செய்யபடாத காரணத்தால் தனக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்திரவு பிறபிக்கப்பட்டது என்றும், அதன் பிறகு திருவண்ணாமலை மாவட்ட கனம் மாவட்ட அமர்வு முதன்மை நீதிமன்றத்தின் உத்திரவு படி வழக்கு கோப்புக்களை ஆரணி கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இருந்து மாற்றம் செய்ய கோரி மனு தாக்கல் செய்து இருந்தாகவும், அதன் பேரில் மாவட்ட முதன்மை நீதிமன்றம் திருவண்ணாமலை அவர்கள் உத்திரவின் படி 16.06.2022 ல் விசாரணை நீதிமன்ற அசல் வழக்கு எண்.70/2012–னை கனம் ஆரணி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்தும், அதன் பேரில் மேற்கண்ட வழக்கானது கனம் ஆரணி சார்பு நீதிமன்றத்தில் ஏற்கனவே நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.65/2014 உடன் இணைத்து மேற்கண்ட வழக்கினை தொடர்ந்து நடத்த உத்திரவிடப்பட்டது என்றும் அதன் பிறகு மேற்கண்ட வழக்கானது அசல் வழக்கு எண்.202/2022 என்று கனம் கோர்ட்டில் நெம்பர் ஆகியதாகவும் அதன் பேரில் மேற்கண்ட மனுவினை தாக்கல் செய்து உள்ளதாகவும் கண்டுள்ள சங்கதி சம்மந்தமாக மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது.

4. மேற்கண்ட அபிடவிட்டில் பாரா 4 ல் கண்டுள்ள சங்கதிகள் குறித்து மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. 1ம் எதிர்மனுதாரர் ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.70/2012 என்ற வழக்கினை தாக்கல் செய்து அதில் தாவா சொத்தானது தனக்கு பாத்தியப்பட்டது என்றும் மற்றும் தன்னுடைய அனுபவத்தை பிரதிவாதிகள் தடை செய்ய கூடாது என நிரந்தர தடையுத்திரவு கோரி வழக்கினை தாக்கல் செய்து இருந்தார். மேற்கண்ட விசாரணை நீதிமன்ற அசல் வழக்கு எண்.70/2012ல் மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு அதன் பேரில் மேற்கண்ட மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஏறதாழ 14 வாய்தாக்கள் போடப்பட்டு

இருந்தும், 1ம் எதிர்மனுதாரரை மேற்கண்ட மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மேற்கண்ட மனுதாரர் தரப்பில் திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்கண்ட வழக்கினை மாற்றம் செய்ய கோரி மனு தாக்கல் செய்து இருப்பதாக கூறப்பட்ட நிலையில் இது சம்பந்தமாக எவ்விதமான தடையாணை உத்திரவும் பிறப்பிக்காத நிலையில் விசாரணை நீதிமன்றத்தில் நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 29.03.2022ல் வாய்தா போடப்பட்டு இருந்தது. ஆனால் மேற்கண்ட வாய்தா தினம் மனுதாரர் ஆஜர் ஆகாத காரணத்தால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பிறகு மீண்டும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.ஆ.2 ஆக சங்கர் என்பவரும் மற்றும் வா.சா.ஆ.3 வரதன் ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டார்கள். அதன் பிறகு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டு இருந்த நிலையில் மேற்கண்ட வழக்கானது கனம் திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிமன்ற டி.ஆர். ஒ.பி.எண்.21/2018 முன்னிலைக்கு கனம் கோர்ட்டிற்கு மாற்றப்பட்டு நிலுவையில் உள்ளது.

5. மேற்கண்ட மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞர் மூலம் 10.01.2023 ல் கனம் கோர்ட்டில் ஆஜர் ஆகி இருந்தார். அதன்பிறகு மேற்கண்ட மனுதாரர் எவ்விதமான நடவடிக்கையும் தன் தரப்பில் மேற்கொள்ளலாமல் தற்போது ஒரு தலைப்பட்ச வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மேற்கண்ட மனுக்களை 28.07.2025ல் தாக்கல் செய்துள்ளார். ஏறத்தாழ 2 1/2 ஆண்டுகள் கழித்து மேற்கண்ட மனுதாரர் கனம் கோர்ட்டில் தாக்கல் செய்து இருப்பது மேற்கண்ட வழக்கினை கால தாமதபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யபட்டுள்ளது. எனவே மனு நிலைக்கதக்கதல்ல. எனவே வாதி தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் மேற்கண்ட சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டி இருப்பதால் மேற்கண்ட வழக்கினை Re-open செய்ய கோரும் இம்மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

6. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **<u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் இந்த மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், அ.வ.எண்.70/2012 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்ட நிலையில், 04.03.2022ம் தேதி மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் குறிப்பாணை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த குறிப்பாணையில் திருவண்ணாமலை, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் Transfer O.P. No.21/2018 என்ற மனு நிலுவையில் இருப்பதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதாக விவரம் Notes paper–ல் உள்ளது. அதன்பின்னிட்டு 29.03.2022ம் தேதி வா.சா.1ஐ மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால், மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு திருவண்ணாமலை, முதன்மை மாவட்ட நீதிமன்றம் Transfer O.P.No.21/2018ல் 16.06.2022 தேதியிட்ட உத்தரவின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு மேற்படி அ.வ.எண்.70/2012 மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் புதிய வழக்கு எண்.202/2022 வழங்கப்பட்டு இருதரப்பினர்களுக்கும் நீதிமன்றம் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. நீதிமன்ற அறிவிப்பினை மனுதாரர்/1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். இ.ம.எண்.4/2025 என்ற மனு மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.2/2025 வாதி தரப்பு சாட்சிகளை மீண்டும் அழைக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் விதமாக வழக்கினை மறு திருப்பு செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1 எதிர்மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக 14 வாய்தாக்கள் போடப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் திருவண்ணாமலை, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கினை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய கோரி மனு தாக்கல் செய்திருப்பதாக கூறப்பட்ட நிலையில், தடையாணை உத்தரவு எதுவும் பிறப்பிக்காத நிலையில், மனுதாரர் தரப்பில் வா.சா.1ஐ 29.03.2022ல் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததாலும், மனுதாரர் ஆஜராகாததாலும், மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு திருவண்ணாமலை, முதன்மை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் பேரில் வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் இந்நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்ட பிறகு 10.01.2023ல் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளார். அசல் வழக்கானது ஒருதலைபட்ச வாதுரைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில், சுமார் 2 1/2 ஆண்டுகள் கழித்து

மனுதாரர் இ.ம.எண்.4/2025 என்ற மனுவை ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்ய தாக்கல் செய்துள்ளார். வழக்கை காலதாமதம் படுத்தவேண்டி தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கானது வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கானது ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.70/2012 ஆக நிலுவையில் இருந்து வந்த நிலையில், திருவண்ணாமலை, முதன்மை மாவட்ட நீதிமன்றம் Transfer O.P. No.21/2018 என்ற மனுவில் பிறப்பித்த உத்தரவின் பேரில் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.70/2012 என்று ஆரணி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது 29.03.2022 தேதியில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று காரணம் கூறப்பட்டுள்ளது. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்பதற்கு மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட பிறகு புதிய வழக்கு எண்.202/2022 என்று புதிய எண் வழங்கப்பட்டு, தரப்பினர்களுக்கு நீதிமன்ற அறிவிப்பு அனுப்பப்பட்டது. மனுதாரர்/1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு 10.01.2023ல் வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். ஆனால் இந்த மனு 18.07.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் உள்ள இருதரப்பினருக்கும் இடையே உள்ள வழக்கு சொத்து சம்மந்தமான பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு இருதரப்பு விசாரணை அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வா.சா.1ஐ மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாமல் போனால் இந்நீதிமன்றத்திற்கு வழக்கு சொத்து குறித்த உண்மை விவரங்கள் தெரியாமல் போய்விடும். அதனால், அசல் வழக்கை தீர்வு காண இந்நீதிமன்றத்திற்கு சிரமமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வா.சா.1ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர் தரப்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பினை அளிப்பது இயற்கை நீதியின்பால் அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்

தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டி தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.4/2025 இன்றைய தினம் நிபந்தனை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிபந்தனையை பூர்த்தி செய்ய 16.12.2025ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி இ.ம.எண்.4/2025 அனுமதிக்கப்பட்டால் இம்மனுவும் அனுமதிக்கப்படும்.

**முடிவாக,** இ.ம.எண்.4/2025 அனுமதிக்கப்பட்டால் இம்மனுவும் அனுமதிக்கப்படும். நிபந்தனையை பூர்த்தி செய்ய அழைக்க வாய்தா 16.12.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.12.06 17:29:10 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.12.06 17:29:20 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.